
Registered as a News Paper in Ceylon

★★ விலை: சதம் 15

13 AUG 1971
UNDERGRADUATE LIBRARY



பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.

# ஈழநாடு

EELA NADU

National Tamil Daily

தேசிய தினசரி

தபால் பெட்டி எண். 49 போன்: 389

SIEMENS 1" & $1\frac{1}{4}$"
சிமன்ஸ் மின்சார
நீர் இறைக்கும்
மோட்டர்கள்
மலிவாகக் கிடைக்குமிடம்:
கதிர் ஹாட்வெயர்ஸ்
11/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7130 தந்தி: KATHIR

மலர் 13 ஆடி 28 ஐ: ஆவிர் 21 (13—8—71) வெள்ளிக்கிழமை இதழ் 181

## பொலிசில் ஒப்படையுங்கள்

# துப்பாக்கி லைசென்ஸ் ரத்து!

# 15 நாள் அவகாசம்

### அமைச்சர் பீலிக்ஸ் அறிவிப்பு

[illegible] கோட்டை, வியாழன்

**துப்பாக்கி வைத்திருப்பதற்கு வழங்கப்பட்ட லைசென்சுகள் இன்றிலிருந்து ரத்துச்செய்யப்பட்டுள்ளது. துப்பாக்கிகளை வைத்திருப்போர் அவற்றை உடனடியாக அண்மையிலுள்ள பொலிஸ்நிலையத்தில் கையளிக்கவேண்டும் என்று பொதுநிர்வாக உள்ளூராட்சி அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா இன்று அறிவித்தார்.**

துப்பாக்கி லைசென்ஸ் ரத்துச்செய்யப்பட்டது சம்பந்தமாக அமைச்சர் அறிவித்திருப்பதாவது!

அவ்வப்பகுதியில் பாவனையிலுள்ள துப்பாக்கிகளை கையளிக்கும்படி அரசாங்க அதிபர்கள் அறிவித்த 15 தினங்களுக்குள் துப்பாக்கிகளை அண்மையிலுள்ள பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கவேண்டும். பொலிஸ் நிலையம் இல்லாதபகுதிகளைச் சேர்ந்தவர்கள், அவற்றை பிரிவுக் காரியாதிகாரியிடம் ஒப்படைக்கவேண்டும்

**லைசென்சுக்கு மீண்டும் விண்ணப்பம்**

லைசென்ஸ் பெறுவதற்கு இப்போது விண்ணப்பித்தவர்கள் மீண்டும் செப்டம்பர் மாதம் 1ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவேண்டும். குறிப்பிட்ட சில மாவட்டங்களில் உள்ள அவசர தேவையானவர்களுக்கு மட்டுமே லைசென்ஸ் வழங்கப்படும்.

அம்பாறை, மாத்தறை, மொனருகலை, மட்டக்களப்பு, திருகோணமலை, பொலநறுவ, யாழ்ப்பாணம் போன்ற இன்னும் சில இடங்களில் உள்ளவர்களுக்கு மட்டுமே லைசென்ஸ் வழங்கப்படும். ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் விண்ணப்பிக்கலாம். அவர்களது தேவையைப் பொறுத்து லைசென்ஸ் வழங்கப்படும். ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் லைசென்சுக்கு விண்ணப்பிக்கலாம். ஆயினும் அவர்களது தேவையைப்பொறுத்தே லைசென்ஸ் வழங்கப்படும்.

தேவையற்றவர்களின் கையில் துப்பாக்கியிருப்பதைத் தடைசெய்யவேண்டும் என்றும், லைசென்சுகளை ரத்துச்செய்துவிட்டு அத்தியாவசியமானவர்களுக்கு மட்டுமே துப்பாக்கி வழங்க வேண்டுமென்றும் அண்மையில் மந்திரிசபை தீர்மானித்திருந்தது தெரிந்ததே.

# பாக். இந்திய ராஜீய உறவுகள் முறியுமா?

புதுடில்லி, ஆக 12

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே ராஜ்ய உறவு முறியுமா என்ற சந்தேகம் இப்பொழுது அரசியல் வட்டாரங்களில் எழுந்துள்ளது.

கிழக்குப் பாகிஸ்தான் தலைநகரான டாக்காவில் தடுத்து வைக்கப்பட்ட துணைத்தூதரக ஊழியர்களை இந்தியாவுக்கு அனுப்பவும் கல்கத்தாவில் தடுத்து வைக்கப்பட்ட பாகிஸ்தான் துணைதூதரகத்தைச் சேர்ந்த அதிகாரிகளைப் பாகிஸ்தானுக்கு அனுப்பவும் செய்து கொண்ட முடிவின்படி இந்தியாவிலுள்ள பாகிஸ்தான் துணைத் தூதரக அதிகாரிகள் கொண்ட முதல்குழு இன்று காலை 10-30க்கு சுவிஸ் விமானமொன்றில் கல்கத்தாவிலிருந்து ராவல்பிண்டிக்குப் புறப்பட்டுச் சென்றனர். இவர்கள் புறப்பாட்டுக்கான சகல செயல்களையும் இந்தியாவிலுள்ள சுவிஸ் தூதரக அதிகாரி ஒருவரும் இந்தியப் பாதுகாப்பிலாகாவைச் சேர்ந்த அதிகாரி ஒருவரும் பார்வையிட்டனர்.

இதே நேரத்தில் டாக்காவில் தடுத்து வைக்கப்பட்ட இந்திய துணைத் தூதுவர் திரு. சென்குப்தா உட்பட 162 பேர் சுவிஸ்விமானம் ஒன்றில் இந்தியாவுக்குவந்து கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# 'பாலர் பாடசாலைகளை பொறுப்பேற்கவேண்டும்'

மாவிட்டபுரம், வியா

அனுபவமுள்ள ஆசிரியர்களைக் கொண்டு நடாத்தப்பட்டு வரும் பாலர் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும் என்று அகில இலங்கை தமிழாசிரியர் சங்க வருடாந்த விசேட கூட்டத்திற்கு தலைமை தாங்கிய திரு. சந்தையா கூறினார்

திரு. சந்தையா மேலும் பேசுகையில் பாடசாலை ஆரம்ப வயதை ஐந்திலிருந்து ஆறாக உயர்த்துவதை விட்டு கல்வி மந்திரி புனராலோசனை செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்

அவர் மேலும் கூறியதாவது! நாட்டின் முக்கிய மொழியான சிங்கள மொழிக்கு அளிக்கப்பட்ட இடம் தமிழ் மொழிக்கும் அளிக்கப்பட வேண்டும் அப்படியானால்தான் ஆசிரியர்கள் யாவரும் ஒரு சங்கத்தின் கீழ் இயங்க முடியும்

சிங்களம் தமிழ் ஆங்கிலம் என்று மொழிவழித் தொழிற் சங்கங்கள் பிரிந்திருந்த போதிலும் ஆசிரியர்களின் பொதுவான பிரச்சினைகளுக்காக சேர்ந்த கூட்டுச்சபை, சம்மேளனமாக மாறியபின் அதன் நடவடிக்கை நல்லமுறையில் நடைபெறவில்லை. இச்சம்மேளனம், அரசியல் சிக்கல்களில் அகப்படாது நின்று கல்வித் துறைக்கும், ஆசிரியர்களுக்கும் கடமையாற்ற வேண்டும்.

திரு. க. இ. குமாரசாமி திரு. வீ. ப. நல்லதம்பி உட்பட பலர் உரையாற்றினார்கள்.

யாழ்-பருத்தித்துறை பாதையில்

# ஒரு மணிநேரத்துக்கு ஒருகடுகதி பஸ் சேவை

யாழ்ப்பாணம், வெள்ளி

தனியார் மோட்டார் வான் சேவைகளால் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு ஏற்படும் நஷ்டத்துக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு இலங்கைப் போக்குவரத்துச்சபையின் யாழ்ப்பாணக் கிளை முன்வந்துள்ளது.

யாழ்ப்பாணம் பருத்தித்துறைப் பாதையிலேயே அதிக அளவில் தனியார் வான் சேவைகள் நடைபெறுவதால் யாழ்ப்பாணத்துக்கும் பருத்தித்துறைக்குமிடையில் ஒரு மணி நேரத்துக்கு ஒன்றாக புதிய பஸ்கள் கடுகதி சேவையிலீடுபடுத்தப்பட்டுள்ளன.

காலையில் 6-15க்கு பருத்தித்துறையிலிருந்து புறப்படும் இந்தக் கடுகதி பஸ் ஐம்பத்தைந்து நிமிடங்களில் யாழ்ப்பாணம்போய்ச் சேருகிறது. சென்றபத்தாம் தேதி முதல் இந்தக் கடுகதி பஸ்சேவை நடைபெற்று வருகிறது. பருத்தித்துறையிலிருந்து புறப்பட்டு பருத்தித்துறை டிப்போ, இராமக்கோடு, மந்திகை ஆஸ்பத்திரி, மாலிசந்தி, நெல்லியடி, குஞ்சர்கடை, வல்லைச் சந்தி, அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர், நீர்வேலி கோவிலடி, கோப்பாய்ச் சந்தி, இருபாலை, முத்திரைச்சந்தை, யாழ். ஆஸ்பத்திரி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் மட்டுமே இந்த பஸ் நிறுத்தப்படும்.

இன்று அமைச்சர் ஆரம்பிக்கும்

# குருநகர் வீடமைப்பில் குடிநீர் மின்சாரவசதி

யாழ்ப்பாணம், வெள்ளி

வீடமைப்பு கட்டிட நிர்மாண அமைச்சர் திரு. பீட்டர் கெனமன் இன்று மாலை குருநகரில் வீடமைப்புத்திட்டத்தை ஆரம்பித்துவைப்பார்.

குறைந்தசெலவில் அமைக்கப்படும் இத்திட்டத்தின்கீழ் 68 வீடுகளைக்கொண்ட 27 கட்டடப் பகுதிகள் அமைக்கப்படும்.

இவ்வீடுகளுக்கு குடிநீர் மின்சார வசதிகள் செய்து கொடுக்கப்படும். இவ்வேலைஸ்தலத்தில் 3 வீடுகள் கட்டி முடியும்நிலையிலிருக்கின்றன. இவ்வீட்டு வேலையும், கிணறும் 2000 அடி நீளமான கம்பிவேலியும், 2 கிழமைக்குள் செய்து முடிப்பதற்கு, தொழில்நுட்ப உத்தியோகத்தர் தொழிலாளர் ஆகியோரின் ஒத்துழைப்பே காரணம் என கட்டடத் திணைக்களத் தொழில்நுட்ப உத்தியோகத்தர் சங்கத் தலைவர் திரு. கே. முத்துலிங்கம் நேற்றுத் தெரிவித்தார்.

இன்று நண்பகல் விமானத்தில் வரும் அமைச்சர் கெனமனுக்குபலாலி விமான நிலையத்தில் வரவேற்பளிக்கப்படும். அமைச்சருக்கு குருநகர் கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கத்தினால் வரவேற்பளிக்கப்படும்.

# புயல் எச்சரிக்கை!

கோட்டை, வெள்ளி

இன்று பிற்பகல்வரை கரையோரப் பகுதிகளில் மழையுடன் கூடிய புயல் காற்று வீசும் என்று கொழும்பு அவதானநிலையம்நேற்று அறிவித்தது. கடற்கொந்தளிப்பு இருக்குமாகையால் மீனவரை எச்சரிக்கையுடன் இருக்குமாறு அறிவிக்கப்பட்டது.

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி பி.ப. 6 30, 10-00
முக்காலா - அஞ்சலிதேவி
நடித்த
நிரபராதி

வெலிங்டன் சினிமா
பகலிப்பாய்
பி ப 2-30, 6-30, 10-00
சிவாஜி - சரோஜாதேவி
நடித்த
ஆலயமணி

ராணி (யாழ்ப்பாணம்)
பி.ப, 2-30 இரவு, 6-30, 10-00
சுந்தரராஜன் - நாகேஷ்
சௌகார்ஜானகி - லக்ஷ்மி
நடித்த
கஸ்தூரி திலகம்

வின்ஸர் தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
எம். ஜி, ஆர். வாணிஸ்ரீ-நம்பியார்
அசோகன், ஜோதிலட்சுமி, நாகேஷ், மனோரமா
மற்றும் பலர் நடித்த
தலைவன்

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
பேபி ராணி
சுந்தரராஜன்—பத்மினி
நடித்த
குழந்தைக்காக

ரீகல் யாழ்ப்பாணம் தினசரி பி. ப. 2-00 இரவு 9-45 மட்டும்
கே. ஏ. தங்கவேலு, அஞ்சலிதேவி,
டி. ஆர். ராமச்சந்திரன் நடித்த
அடுத்தவீட்டுப் பெண் புதிய கொப்பி

REGAL - Jaffna NOW SHOWING
Daily at 5-15 & 7-15 p.m. only
Sat, Sunday 10-30 A. M.
Jim Brown - Rock Hudson in
ICE-STATION-ZEBRA (Color Scope)

கடைசி வாரம்
இந்தியாவின் பல நகரங்களிலும், ஈழத்தின் தலைநகர் கொழும்பிலும் 25 வாரங்களுக்கு மேல் காட்சியளித்துப் பெரும் சாதனையை நிலைநாட்டிய வெற்றிச் சித்திரம்.

லிடோ யாழ்நகர்
தினசரி காலை10-30, பி ப 2-30, மாலை6-30, இரவு10-00



சாதனா
சஞ்சே
பல்ராஜ்ஸானி
சப்னம்
நடித்த
ஏக் பூல் தோ மாலி
( ஹிந்தி )
(ஈஸ்ட்மன் கலர் )

வெலிங்டன்
(யாழ் நகர்)
தினசரி மூன்று காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
ராஜன் - சௌகார்ஜானகி
கே. பி. சுந்தராம்பாள்
நடித்த
துணைவன்

## யாழ்ப்பாணம் மாநகர சபை
### ஏல விற்பனை

பின்வருவன ஏலத்தில் விற்கப்படவிருக்கின்றன. எல்லாப்பொருட்களும் அந்தந்த இடங்களில் வைத்து விற்கப்படும். கூடிய கேள்விக்காரர் உடனடியாக அத்தொகையை ஏலவிற்பனை உத்தியோகஸ்தரிடம் செலுத்தி குறிப்பிட்ட பொருளை அப்புறப்படுத்தல் வேண்டும்.

4 தறித்த பனை மரங்கள்- 6-ம் வட்டாரம், ஈச்சமட்டை விளையாட்டு மைதானத்தில் 16-8-71ம் திகதி காலை 10-00 மணிக்கு.

8 தறித்த பனை மரங்கள்- குருநகர் திட்டியில் பி. டபிள்யு. டி. கந்தோருக்குப் பின்புறமாக 16-8-71ம் திகதி 11-00 மணிக்கு.

15 தறித்த பனைமரங்களும் 1 தறித்த தென்னைமரமும்- குருநகர், திட்டி இராசசிங்கம் வீதியில் 16-8-71ம் திகதி 11-30 மணிக்கு.

எருக்குவியல் ஒன்று- மாநகர சபை களஞ்சியம், பண்ணை வீதி கொட்டடி 17-8-71ம் திகதி 10-00 மணிக்கு.

ஒரு மருதமரமும் நான்கு கொப்புகளும்- மணிக்கூட்டுக்கோபுரத்தின் அண்மையில் பெட்ரோல் விற்பனை நிலையத்திற்கு முன்பாக, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 17-8-71-ம் திகதி 11-00 மணிக்கு

ஒரு வாகைமரம்- சிவன் கோவில்றோட், தின்னவேலி உபதபால் கந்தோருக்கு முன்பாக. 16-8-71-ம் திகதி காலை 10-30 மணிக்கு.

ஏ. ரி. சுந்தரம்,
மாநகர சபை
ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

5-8-71 2955

## இவர்கள் தீர்மானம்

பருத்தித்துறை, வியாழன் வடபகுதி சுகாதார நிர்வாக ஊழியர் சங்கத்தின் சில கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டதன் எதிரொலியாக இப்பகுதி சங்கப் பகுதியினர் கடமை நேர வேலைகளைத் தவிர மேலதிக வேலைகளில் ஈடுபடுவதில்லை எனத் தீர்மானித்துள்ளனர்.

## இந்தத் தந்தி எங்கே?

புத்தளம், வியாழன் கொழும்பிலிருந்து புத்தளவாசி ஒருவருக்கு 26-7-71ம் திகதி அனுப்பப்பட்ட தந்தி இன்றுவரை அந்தநபருக்குக் கிடைக்கவில்லையாம், இந்தத் தந்திக்கு என்ன நேர்ந்தது என்பது இன்னமும் மர்மமாகவே உள்ளது.

MANOHARA- Jaffna
Daily
4-45, 7-00 & 9-45 p. m.
Saturday, Sunday 10-30A.M
Marie - France Boyer
in
SIN WITH A STRANGER
(Techni Color

நாகம்ஸ்சினிமா
சுன்னாகம்
Daily 4-30 p m
Saturday Sunday 10-30
NAKED WORLD
3-வது வாரம்
தினசரி மாலை 6-30, 9-45
ஏ. பி. நாகராஜன்- வரலக்ஷ்மி
நடித்த
ஏழு பிள்ளை
நல்லதங்காள்

## விற்பனைக்கு

கார்:
நல்ல நிலையிலுள்ள A 40, CL 5942 இலக்கமுடைய கார் விற்பனைக்கு உண்டு. நேரில் பார்வையிடலாம். 473/4 கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 3469

## நிதிவழங்கினர்

ஊர்காவற்துறை, வியாழன் நெடுந்தீவு மத்தி செல்லம்மா வித்தியாசாலை ஆசிரியர்களும் வேலணை ஐயனார் வித்தியாசாலை ஆசிரியர்களும் தமது ஒரு நாள் சம்பளத்தை பயங்கரவாதிகளினால் பாதிக்கப்பட்டோர் நிதிக்கு வழங்கியுள்ளனர்

அச்சுவேலியில்

## மிகப் பெரிய கரபந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம், வெள்ளி வடமாகாண விளையாட்டு கழகங்களிடையே மிகவிமரிசையான முறையில், கரபந்தாட்டப் போட்டியொன்று அச்சுவேலியில் நடைபெறவிருக்கின்றது. இந்தப் போட்டியை அச்சுவேலி 'லாலா சோப்' ஸ்தாபனத்தார் இம்மாத இறுதியில் நடாத்தத் திட்டமிட்டுள்ளனர். போட்டி ஒழுங்குகளை திரு. வன்னியசிங்கம் மேற்கொண்டுள்ளார். (தே நி)

## 6 ஆசிரியர்கள் வெற்றி

யாழ்ப்பாணம், வெள்ளி அண்மையில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடந்த மாவட்ட மெய்வல்லுனர் போட்டியில் ஆசிரியர்களுக்கான நிகழ்ச்சியில் அச்சுவேலி ஸ்ரீ விபஸ் வித்தியாலயம் ஆறுபரிசுகளைப் பெற்றுள்ளது.

திரு. வ. மார்க்கண்டு, பி. ஆர். குமாரசிங்க மற்றும் நாலுபேர் கொண்ட குழுக்கள் கொழும்பில் நடைபெறும் அகில இலங்கைப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (தே நி)

## பாராட்டு

யாழ்ப்பாணம், வெள்ளி சித்தன்கேணி சிவச்செல்வி கலாமன்றத்திற்கு நேரில் விஜயம் செய்து பார்வையிட்ட வலி-மேற்குக் காரியாதிகாரி பிரிவைச் சேர்ந்த கலாச்சார உத்தியோகஸ்தர் மன்றத்தின் சேவைகளைப் பாராட்டினார். கலாமன்றத்தின் நிர்வாகத்தையும் சங்கீதம், நடனம், வயலின், மிருதங்கம் மற்றும் சமய வகுப்புகளின் தரத்தையும் மன்ற உத்தியோகத்தர்களின் ஆர்வத்தையும் அவர் பாராட்டினார்.

## வரி விளம்பரம்

மோட்டார் வாகனங்கள் மற்றும் சகலவிதமான யந்திரங்களுக்கும் உதிரிப் பாகங்கள் ஜேர்மனியில் பயிற்றப்பட்ட பொறியியலாளர்களின் மேற்பார்வையில் செய்துகொடுக்கப்படும். சாதா மெசின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3409

அரசாங்கத்தால் பதிவு செய்யப்பட்ட, நூல் வாங்குவதற்கு பெர்மிற் உள்ள ஆறு தறிகள் வைப்பிங் றோலருடன் Japanese AIWA Tape Recorder (Main, Torch Battery & Battery) விற்பனைக்குண்டு. 68, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம். 3458

### தேவை

அனுபவம் உள்ள லேத் இயக்குனர் (Lathe Operater) தேவை. நேரில் வரவும். சேவி இனாஸ் வேக்ஸ், கோப்பாய். 3459

பரி. பேதுரு மெதடிஸ்த திருச்சபை நிம்மர் மண்டப கல்வி நிலையத்திற்குக் கீழ்க்கண்ட பாடங்களில் அனுபவமுள்ள ஆசிரியர்கள் பௌதிக சாஸ்திரம், ரசாயனம், தூயகணிதம், பிரயோக கணிதம். எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். விலாசம்: கல்வி அதிபர், திரு. வி. வி. ராஜரட்ணம், பி. ஏ. (லண்டன்) டிப்ளோமா (சிலோன்) 44, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். 3465

### விற்பனைக்கு

ராதா செவ்விளநீர் எண்ணை:
தினமும் தலையில் தேய்த்து வருவதனால் கூந்தல் நீளமாக வளரும். மனோரம்மியமான வாசனை கொண்டது. எஸ் சுப்பிரமணியம் கொம்பனி. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். செட்டியார் தெரு, கொழும்பு. 3410

பாவித்த நல்ல நிலைமையில் உள்ள சொமசெட் காரின் டிவ்வறன்சர் கொம்பிளீட் ஒன்று விலைக்கு இருக்கின்றது. லிங்கம் & சன்ஸ், சிவன்கோவிலடி, யாழ்ப்பாணம். 3468

### தவறிவிட்டது

11-8-71-ம் திகதி இரவு யாழ்தேவியில் ரங்பெட்டி ஒன்று உடுப்பும், வாச்சர் பட்டியும் சில சாமான்களுடன் யாழ்ப்பாண ஸ்ரேசனுக்கும் காங்கேசன்துறை ஸ்ரேசனுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டவர்கள் தயவு செய்து உடன் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கவும். 3466

பரி, பேதுரு மெதடிஸ்த திருச்சபை
நிம்மர் மண்டப கல்வி நிலையம்.

அதிபர்:
வணம் ஈ, எஸ். கொட்டர்,
பதிவாளர்:
செல்வி
சி. வீரகத்திப்பிள்ளை,

கல்வி அதிபர்:
திரு, வி. வி ராஜரட்ணம்
பி ஏ, (லண்டன்)
டிப்ளோமா (சிலோன்)

★ 1971-ம் ஆண்டுப் பரீட்சைக்கு ஆயத்தம் செய்யும் பெண்பாலாருக்கு (க. பொ. த. ப. சாதாரண வகுப்பு) தனி வகுப்பு.
★ எட்டாம் வகுப்பும் அதற்கு மேற்பட்ட வகுப்பு பாடசாலை மாணவர்களுக்காகவும் காலையிலும் மாலையிலும் விசேட ஆங்கில வகுப்புகள்.
★ வயது வந்தவர்களுக்கு ஆங்கில வகுப்பு.
★ சங்கீத வகுப்பு - மேலைநாட்டு சங்கீதமும், கர்நாடக சங்கீதமும்.
★ மனையியல் வகுப்பு.

வகுப்புக்கள் செப்டம்பர் மாதம் 1-ந் திகதி புதன்கிழமை ஆரம்பமாகும். விண்ணப்பங்கள் இம்மாதம் 25-ந் திகதிக்கு முன்னர் அனுப்பப்படவேண்டும். விலாசம்: பதிவாளர். நிம்மர் மண்டப கல்வி நிலையம் C/o லொகிவூட் கவுஸ், வேம்படி வீதி, யாழ்ப்பாணம். 2961

## பாக். சிறையில் விசாரணை ஆரம்பம்

# முஜிபுர் உயிரைக் காப்பாற்ற பாரதம் பெருமுயற்சி

## கி. பாகிஸ்தான் பிரச்னை: அரசியல்தீர்வுகாணவேண்டும்

### இந்தியசோவியத்கூட்டறிக்கைவலியுறுத்து

புதுடில்லி, ஆகஸ்ட் 12 கிழக்குப் பாகிஸ்தான் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண்பதற்கான அவசர நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். ராணுவ நடவடிக்கைகளினால் அங்கு ஏற்பட்டுள்ள பிரச்னைகளைத் தீர்த்துவைக்க முடியாது என்று இந்தியாவும் சோவியத் யூனியனும் விடுத்துள்ள கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

இந்தியாவுக்கு விஜயம் செய்த சோவியத் வெளியுறவு அமைச்சர் திரு குரோமிக்கோ இன்று காலையில் மாஸ்கோ பயணமானார். இவர் தாயகம் திரும்புவதற்கு முன்னதாக இருநாடுகளும் கூட்டாக விடுத்த கூட்டறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

இருநாடுகளுக்குமிடையே செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இதன் மூலம் இருநாடுகளுக்குமிடையேயுள்ள நட்புறவு விஞ்ஞானம் கலை கலாச்சார ஒத்துழைப்பு ஆகியன பலப்படும் இதனால் ஆசியாவில் சமாதானம் ஏற்படுவது மட்டுமல்லாமல் உலகம் முழுவதற்கும் சமாதானம் நிலை இது வழிகாட்டும். இந்தோசீனாவின் வெளியார் தலையீடு விலக்கப்படுவதோடு அப்பகுதியில் வாழும் மக்களுக்கு விருப்பமில்லாத ஒன்றை அவர்கள் மீது சுமத்தக் கூடாது. ஐ நா பாதுகாப்புச் சபையின் 1967-ம் ஆண்டு நவம்பர் மாதம் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு அமைய மேற்காசியப் பிரச்னை தீர்க்கப்பட வேண்டுமென்பதில் இருநாடுகளும் ஒரே கருத்துடையனவாய் இருக்கின்றன கிழக்குப்பாகிஸ்தான் பிரச்னையில் எவ்வித கருத்துக் கொண்டிருக்கிறதோ அதே கருத்தைத்தான் ஏறக்குறைய சோவியத் யூனியனும் கொண்டிருக்கின்றது கிழக்குப்பாகிஸ்தானிலிருந்து இந்தியா வந்திருக்கும் அகதிகள் திரும்பிச் செல்வதற்கான சூழ்நிலைகள் உருவாக்கப்படவேண்டுமென்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

இந்திய-சோவியத் கூட்டமைப்போன்றை ஐக்கிய நாடுகள் சபைக்குள்ளோ வெளியிலோ அமைக்கும் நோக்கம் இல்லை என்றும் அவ்வறிக்கையில் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது

## 24 நாடுகளின் உதவியை இந்திரா நாடியுள்ளார்

வாஷிங்டன், ஆகஸ்ட் 12

கிழக்குப்பாகிஸ்தான் தலைவர் ஷேக்முஜிபுர் ரஹ்மான் மீதான விசாரணை நேற்று ஆரம்பமாகியுள்ளதாக உத்தியோகபூர்வமற்றசெய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால் விசாரணை ஆரம்பமாகி விட்டதா என்பதற்கு உத்தியோக பூர்வமான தகவல் எதையும் பாகிஸ்தான் அரசாங்கம் வெளியிடவில்லை.

**விசாரணைக்குட் படுத்தப் பட்டுள்ள ஷேக்கின் உயிரைக் காப்பாற்ற இந்தியா பெருமுயற்சி எடுத்து வருகின்றது 24 நாடுகளை இது விஷயத்தில் உதவும்படி இந்திராகாந்தி அவசரமாக வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

ஷேக்முஜிபுர் மீதான விசாரணை மேற்குப்பாகிஸ்தானிலுள்ள சிறை ஒன்றில் நடைபெறுவதாகவும், அவ்விசாரணை மன்றத்திற்கு இராணுவத் தளபதிகளில் ஒருவரான லெப்டினன்ட் ஜெனரல் குவாஜா பதியுதீன் என்பவர் தலைவராக இருப்பதாகவும் ராவல்பிண்டி செய்திகளை ஆதாரங்காட்டி அசோசியேட் நியூஸ்ஏஜன்ட் தெரிவித்துள்ளது ஆனால் இது எவ்வளவு தூரம் உண்மையான தென்பதற்கு உத்தியோகபூர்வமான ஆதாரங்கள் கிடைக்கவில்லை. இதுபற்றிய செய்தி எதுவும் கிடைக்கவில்லை என பி. பி. சி. ஸ்தாபனமும் அறிவித்துள்ளது.

முஜிபுர் பாகிஸ்தான்மீது போர் தொடுத்தார் என்ற குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது தெரிந்ததே. பாகிஸ்தான் குற்றச் சட்டத்தின்படி இப்படியான குற்றவாளிகளுக்கு மரண தண்டனையோ ஆயுள் தண்டனையோ விதிக்கப்படலாம்.

### றோஜர்ஸ் கவலை

ஷேக்முஜிபுர் மீது விசாரணை செய்யப்படுவதையிட்டு அமெரிக்கஇராஜாங்க அமைச்சர் திரு றோஜர்ஸ் மிகுந்த கவலை தெரிவித்துள்ளார். இதுவிஷயமாக திரு. றோஜர்ஸ் வாஷிங்டனிலுள்ள பாகிஸ்தான் தூதுவருடன் பேச்சுவார்த்தை நடத்தியதோடு. ஷேக்கின் விசாரணையினால் ஏற்படக்கூடிய விளைவுகளையும், தமது கவலையையும் தெரிவித்ததாக சொல்லப்படுகிறது.

இதற்கிடையே ஷேக் முஜிபுர் மீது இரக்கம்காட்டுமாறு கோரி அமெரிக்கப் பாரிலிமென்டைச் சேர்ந்த 58 உறுப்பினர்கள் கையொப்பமிட்ட அவசரத் தந்தி ஒன்றை ஜனாதிபதி யாஹ்யாகானுக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

### சோவியத் பத்திரிகைகள் கண்டனம்

முஜிபுரின் மீதான விசாரணை ஓர் அரசியல் பழி தீர்க்கும் நடவடிக்கை என்றும் இதனால் கிழக்குப்பாகிஸ்தான் நிலைமை இன்னும் மோசமாகுமென்றும் சோவியத் பத்திரிகைகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

### மக்காரியஸ் கவலை

இந்த விசாரணை சம்பந்தமாக சைப்பிரஸ் அதிபர், மக்காரியஸ் தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துள்ளார். இவ்விதமான நடவடிக்கைகள் கிழக்குப் பாகிஸ்தானில் மேலும் நிலைமையை மோசமாக்குமென்றே தாம் கருதுவதாகவும், இவ்விஷயத்தை பாகிஸ்தான் அரசு புனராலோசனை செய்ய வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

### திருமதி காந்தி அவசர வேண்டுகோள்

இதற்கிடையே முஜிபுரின் உயிரைப்பாதுகாப்பதற்கான உடனடி நடவடிக்கையில் ஈடுபடுமாறு ஐ நா. பொதுக் காரியதரிசி யூதாண்டையும் 24 நாடுகளின் தலைவர்களையும் இந்திய பிரதமர் இந்திராகாந்தி கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்த வேண்டுகோளில், முஜிபுரின் உயிரை மாய்ப்பதற்கே இவ்விசாரணைசெய்யப்படுவதாகவும், அவர்களுடைய எண்ணம் ஈடேறுமானால் அது இந்திய துணைக்கண்டத்தில் ஆபத்தான நிலையையே தோற்றுவிக்கும் என்றும் தெரிவித்துள்ளார். ஷேக்முஜிபுர் ரஹ்மானின் உயிரைக் காப்பாற்ற தமது செல்வாக்கைப் பயன்படுத்துமாறு ஏற்கனவே இந்திய வெளியுறவு மந்திரி திரு சுவரண்சிங் ஐ நா. பொதுச் செயலாளர் யுதாண்டை வலியுறுத்தியிருக்கிறார்.

### யூதாண்ட் செய்தி

இதுபற்றி யூதாண்டிடம் கேட்கப்பட்ட பொழுது. இவ்விஷயம் எல்லா நாடுகளுக்குமே கவலையளிக்குமெனக் கூறினார்.

### அரசாங்க ஹொட்டலில் வெடிகுண்டு விபத்து

டாக்காவிலுள்ள ஆடம்பர அரசாங்க ஹொட்டலான 'இன்டர் ஹார்டினென்டல்'லில் வெடிகுண்டு வெடித்ததில் 19 பாகிஸ்தானியரும் ஒரு அமெரிக்கரும் காயமடைந்தனர். காயமடைந்த அமெரிக்கரும் டைம்ஸ் பத்திரிகை நிருபரான திரு. டேனிட் கிறீன் வேயாகும் இவர் குண்டு வெடித்த இடத்துக்குச் சிறிது தூரத்தில் நின்றாராம், கிழக்குப் பாகிஸ்தானின் கெரில்லாக்கள் எடுத்த நடவடிக்கையில் இது மிகவும் தீவிரமான சம்பவமெனச் சொல்லப்படுகிறது: ஷேக்முஜிபுர் விசாரணை செய்யப்படும் நேரத்திலேயே இக்குண்டும் வெடித்ததாக டைம்ஸ் நிருபர் தெரிவித்தார்.

### அமைச்சருக்கு வேண்டுகோள்

மன்னார், வியா மன்னார் வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை நிபுணர் இல்லாததினால் நோயாளர் பெரிதும் கஷ்டப்படுகின்றனர்.

மன்னார் வைத்தியசாலையில் சென்றவருடம் மாற்றலாகிப் போன சத்திர சிகிச்சை நிபுணருக்குப் பதிலாக இதுவரையில் வேறு எவரும்நியமிக்கப்படவில்லை இதனால் நோயாளிகள் பெரிதும் கஷ்டமுறுவதோடு பிற இடங்களுக்கும் சென்று வைத்திய சிகிச்சை பெற்று வருகின்றனர் மேலும் போதிய வைத்தியர்களும் வைத்திய உபகரணங்களும் இல்லையென்றும் வார்ட்டுகள் அழுக்கடைந்து போயுள்ளதாயும் இதுகுறித்து உடன் நடவடிக்கையெடுக்கும்படியும், வைத்திய அதிகாரிகளையும், சத்திரசிகிச்சை நிபுணரையும் நியமிக்கும்படியும் கோரி, மன்னார் எம்.பி. யும். மன்னார் ஸ்ரீ ல. சு கட்சியைச்சேர்ந்த ஐஜூப்கானும் சம்பந்தப்பட்ட மந்திரிக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

### சோவியத விமான விபத்தில் 100 பேர் பலி

மாஸ்கோ, ஆக. 12 சோவியத் யூனியன் பிரயாணிகள் விமானமொன்று விபத்துக்குள்ளானதில் அதில் இருந்த 100 பிரயாணிகள் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் இந்த விபத்துக்கான காரணம் என்ன என்பது தெரிவிக்கப்படவில்லை.

---

வருடம் ரூ. 10 லக்ஷம் நஷ்டம்

## மனித உணவு எலிகளுக்கு இரை!

கோட்டை, வியாழன் வருடந்தோறும் மக்கள் பாவனைக்கென இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருட்களில் அரிசி, மாவு, கடலை, பருப்பு, மல்லி போன்றவற்றில் பத்துலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் வண்டுகளுக்கும் எலிகளுக்கும் உணவாகின்றனவாம்.

கடந்த ஏழு ஆண்டுகளாகவே இந்த நிலைமை இருந்து வருவதாகவும் இதனைத் தடுப்பதற்காக எடுக்கப்பட்ட எந்த நடவடிக்கையும் பலனளிக்கவில்லை என்றும் கூறப்படுகின்றது. பர்மாவிலிருந்து தருவிக்கப்பட்ட அரிசியில் 75000 தொன்வரை பாவனைக்கு எடுக்கமுடியாதபடி வண்டுகள் அரித்துக்கிடக்கின்றனவாம். இதுபோல் இதர உணவுப் பொருட்களும் வண்டுகளுக்கும் எலிகளுக்கும் இரையாகின்றனவாம்.

### குற்றச் செயல்கள் குறைகின்றன

மன்னார், வியாழன் மன்னாரில் குற்றச்செயல்கள் வெகுவாகக் குறைந்துள்ளன. பொலிஸ் இன்ஸ்பெக்டர் நவரத்தினராசாவின் தலைமையில் இயங்கும் பொலிஸ் கோஷ்டியினர் இரவும் பகலும் ரோந்து சுற்றி குற்றச்செயல்களை ஒழிப்பதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இவர்கள்

### சிங்களம் பயில வசதி செய்யப்பட்டது

குருநகர், வியாழன் யாழ். அரசாங்க அலுவலகத்தில் சிங்களப் பரீட்சை எடுப்பவர்களுக்குச் சிங்கள போதனாசிரியர் இல்லாதிருந்த கஷ்டங்களை நீக்கும் பொருட்டு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா நேற்று முதல் சிங்கள போதனாசிரியர் ஒருவரை நியமித்துள்ளார். சிங்களம் படித்து வரும் ஊழியர்களுக்கு நேற்று முதல் இவ்வகுப்பு நடத்தப்படுகின்றது.

சிங்கள போதனாசிரியர் இல்லாதிருந்தது பற்றி அரசாங்க பொதுசேவைத் தொழிலாளர் சங்க யாழ். கிளை அரசாங்க அதிபருக்கு முறையிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# தனியார் பாடசாலைகளை அரசு கையேற்கவிருக்கிறது

கோட்டை, வியா. எஞ்சியிருக்கும் தனியார் பாடசாலைகளையும் அரசாங்கம் எடுத்து நடாத்தவிருக்கிறது.

இத்தகவலை கல்வி அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி திரு. பி. டை. குடாவே கொழும்பு கார்சில் வீதியிலுள்ள தேவி பாலிக மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற வருடாந்த பரிசளிப்புவிழாவின் போது பேசுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

கல்வி அமைச்சு பொதுக்கல்வித்திட்டம் ஒன்றை வகுத்துவருகிறது. இதனால் நாட்டிலுள்ள சகல பாடசாலைகளும் இத்திட்டத்தைப் பின்பற்ற இது மிகவும் உதவியாக இருக்கும்.

1960-ல் பல பாடசாலைகள் தனியார்துறையில் இயங்க அனுமதிக்கப்பட்டது. இதனால்தான் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டமும் வேறுபல பிரச்சினைகளும் எழுந்துள்ளன.

படித்துவிட்டுத் தொழில் பார்ப்பது அவமரியாதை என மாணவர்கள் நினைக்கிறார்கள். கல்வி மூலம் தொழில் திறமையை ஒவ்வொரு மாணவர்களுக்கும் பயிற்றுவிக்கவேண்டும்.

## தற்கொலை?

யாழ்ப்பாணம், வெள். பரந்தனைச் சேர்ந்த கந்தையா செல்லத்துரை என்பவர் நச்சுத்திராவகம் அருந்தி மரணமானார். இவரது மரணம் பற்றி திடீர்மரணவிசாரணை அதிகாரி திரு மு. வே. லிங்கம் விசாரணை நடத்தினார்: காலஞ்சென்ற செல்லத்துரையின் மனைவி நாகம்மா சாட்சியமளிக்கையில் பின்வருமாறு தெரிவித்தார்.

நாங்களிருவரும் சந்தோஷமாகவே வாழ்ந்து வந்தோம், எனது சகோதரியின் புருஷன் எங்களுக்குப் பெருந் தொல்லைகொடுத்து வந்தார். இதுபற்றி நாங்கள் கிளிநொச்சிப் பொலிசிலும் புகார் செய்திருந்தோம். ஆனாலும் அவரது தொல்லை குறையவேயில்லை. இதனால் எல்லோரும் நஞ்சுகுடித்துச் சாவோம் என்று எனது புருஷன் கேட்டார். நாங்கள் மறுத்துவிட்டோம். அவர் நஞ்சருந்திவிட்டார்.

என்னையும் எனது பிள்ளைகளையும் எனதுசகோதரியின் புருஷனிடமிருந்து நீங்கள் தான் காப்பாற்ற வேண்டும்.

சகோதரியின் புருஷனை அழைத்துவர மரண விசாரணை அதிகாரி உத்தரவிட்டார். அவர் தலைமறைவாகிவிட்டார். பொலிசார் தொடர்ந்து புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

---

மென்பந்தாட்டம்

## இரசாயனக் கோஷ்டி சம்பியன்

யாழ்ப்பாணம், வெள்ளி. கிளிநொச்சி காரியாதிகாரிப் பிரிவிலுள்ள, விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்தி வந்த மென்பந்தாட்டப் போட்டியில் பரந்தன் இரசாயனக்கோஷ்டி சாம்பியனாக வந்தது.

இறுதியாட்டத்தில், ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபனக் கோஷ்டியும், பரந்தன் இரசாயனக் கோஷ்டியும் மோதிக் கொண்டன.

உப்புக் கூட்டுஸ்தாபனம் முதல் இன்னிங்ஸில் 57 ஓட்டங்களையும், 2-வது இன்னிங்ஸில் 63 ஓட்டங்களையும் பெற்றது. இரசாயனக் கோஷ்டி முதல் இன்னிங்ஸில் 9 விக்கெட் நஷ்டத்துக்கு 159 ஓட்டங்களைப் பெற்று, எதிர்க் கோஷ்டியை இன்னிங்ஸ் வித்தியாசத்தால் தோற்கடித்தது. (நே நி)

---

## புனரமைப்பு

புத்தளம், வியா. புத்தளம் நகரத்தின் மத்தியில் சீர்கெட்டுகிடக்கும் 'வண்ணான் குளத்தைச் சீர்திருத்தி இக்குள கரைகளை உயர்த்திக்கட்டி திருத்த புத்தளம் நகரசபை முடிவுசெய்துள்ளது.

## அர்ச்சகருக்குப் பொன்னுடை கௌரவம்

மாவிட்டபுரம், வியா. அர்ச்சகர் தொழிலைத் தாம் ஆரம்பித்தது முதல் விநாயகரையே அர்ச்சிக்கும் வாய்ப்பு ஏற்பட்டதாகவும் சகல கஷ்டமும் தீர்க்கும் விநாயகப்பெருமான் எமது சமயத்தில் நிலவும் சீர்கேடுகளைக் களைந்து சைவ விழிப்புணர்ச்சிக்கு உதவுவார் என்றும் குப்பிளான் கற்கரைப் பிள்ளையார் கோவில் அர்ச்சகர் பிரமஸ்ரீ குமாரராஜா. ஆலய பரிபாலனசபை அங்கத்தவர்கள் சார்பில் தமக்குப் பொன்னுடை போர்த்திக் கௌரவித்தமைக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் கூறினர். ஆலய மண்டபத்தில் நடைபெற்ற இவ்வைபவத்தில் ஆலய முகாமையாளர் திரு எஸ். தம்பிமுத்து பொன்னுடையைப் போர்த்தினார்.

குப்ளான் விக்னேஸ்வர வித்தியாலய அதிபர் திரு. செ நடராசா இவ் வைபவத்தில் பேசுகையில் கூறியதாவது:

'ஒரு கிராமத்திலுள்ள ஆலயம் வளர்ச்சி பெறவும் ஆலயமூலம் மக்களிடையே ஆன்மீகம் நிலையூன்றவும் செய்யும் பெரும் பொறுப்பு ஆலய அர்ச்சகரிடமே தங்கியுள்ளது பாராட்டுக்குரிய அர்ச்சகர் இதற்கு முன் மாதிரியானவர், அவர் சமய மறுமலர்ச்சிக்கு உதவவேண்டும்'.

......

விளையாட்டுப் போட்டி

## 'சளைக்காத மனப்பான்மையை உருவாக்கும்'

தாவடி, வியா. "வாழ்வில் சளைக்காத மனப்பான்மையை உருவாக்குவதற்கு விளையாட்டுப் போட்டிகள் அவசியமாகும்' என்று புத்தளம் மாவட்ட நீதிபதி திரு. கே. பாலகிருஷ்ணர் கொக்குவில் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியின் போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் கூறினார்.

நல்லூர்த் தொகுதி ஆட்சி மன்ற உறுப்பினர் திரு சி. அருளம்பலம். முன்னாள் அதிபர் திரு சி. க. கந்தசுவாமி ஆகியோரும் இவ் வைபவத்தில் கலந்துகொண்டனர்.

முதலாவதாக செல்லையா இல்லமும், இரண்டாவதாக கார்த்திகேசு இல்லமும், மூன்றாவதாக சபாரட்ணம் இல்லமும், நாலாவதாக சபாபதி இல்லமும், ஐந்தாவதாக நாகலிங்கம் இல்லமும் வெற்றி பெற்றன. திரு. பாலகிருஷ்ணர் பரிசுகளை வழங்கினார்.

## "மயிலிட்டியில் அமைக்கவும்"

மாவிட்டபுரம், வியா "மீனவர் கூடுதலாக வாழும் மயிலிட்டியில் மீன்பிடிப் பயிற்சிப் பாடசாலையை அமைக்கவேண்டும். என்று மீன்பிடி அமைச்சரை மயிலிட்டி சென் மேரிஸ் கடற்தொழிலாளர் சங்கத்தலைவர் ச. லோறன்ஸ் மகஜர் மூலம் கோரியுள்ளார்.

மயிலிட்டிப்பகுதியில் வசிக்கும் மீனவர்கள் வருடத்தில் எல்லாநாளும் மீன்பிடிக்க வசதியுள்ளதென்றும், கரையோரப்பகுதியில் வாழும் மீனவர்களுக்கும் பொதுவான இடமாக மயிலிட்டி அமைந்துள்ளதால் சகல பகுதி மீனவர்களும் பயிற்சி பெற இங்கு பயிற்சிப்பாடசாலையை நிறுவுதல் நல்லதென்றும் மகஜரில் அவர் கூறியுள்ளார்.

......

## ஓய்வு பெற்ற அதிபருக்கு பிரிவுபசாரம்

யாழ்ப்பாணம், வெள்ளி. வேம்படி மகளிர் கல்லூரி முன்னாள் அதிபர் செல்வி மாபெல் தம்பையாவுக்கு மேற்படி கல்லூரி பெற்றோர் ஆசிரியர் சங்கமும், பழைய மாணவிகள் சங்கமும் இம் மாதம் 14-ம்திகதி பிற்பகல் பிரிவுபசார விழா ஒன்றை நடத்தவிருக்கின்றன. பாடசாலை மண்டபத்தில் இவ்விழா இடம்பெறும்.

கொழும்புக்கு

## 35 000 அந்தர் வெங்காயம்

குருநகர், வியாழன். வடபகுதியிலிருந்து 85,000 அந்தர் வெங்காயத்தை வடபகுதி விவசாய உற்பத்தியாளர் சங்கம் இம் மாதம் கொள்முதல்செய்து கொழும்புக்கு அனுப்பி வைத்துள்ளதாம். வடபகுதி வெங்காய விளைச்சலில் வடபகுதியின் தேவை போக 35,000 அந்தர் வெங்காயத்தை மேற்படி சங்கம் கொழும்புக் கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையத்திற்கு அனுப்பிவைத்துள்ளது



புலோலி, வியா. லங்கா சமசமாஜக் கட்சியின் ஆரம்பகால அங்கத்தவரும் பொதுநல சேவையாற்றி பின்னர் சட்டக் கல்லூரியில் பயின்று அரசாங்க சந்தைப்படுத்தல் திணைக்கள இலாகாவில் பிரசார உத்தியோகஸ்தராக கடமையாற்றி ஓய்வு பெற்றவருமான திரு. த. கங்காதரன் உடுப்பிட்டித் தொகுதியில் உள்ள ஆரம்ப சிரமைப்புச் சங்கங்கள், இதன் கீழுள்ள கடைகள், கொள்வனவு நிலையங்கள், அரசாங்க மொத்த விற்பனவு நிலையங்கள் ஆகியவற்றின் உத்தியோகப் பற்றற்ற மேற்பார்வையாளராக உள்நாட்டு வெளிநாட்டு அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் பல கூட்டுறவுச் சங்கங்களிலும் மன்றங்களிலும் அங்கம் வகித்து அரிய பல சேவைகளைச் செய்தவர். கடைவேலி கிராம சபையின் உறுப்பினராகவும் உள்ளார்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

வெள்ளி 13—8—71

(செய்திகள்: காலை 6-30, பகல் 12-45, மாலை 6-00' இரவு 9-00)

844 மீ அலை 61 மீ

காலை 6-00 நாதாஞ்சலி, 6-10 சைவநற்சிந்தனை, 6-15 இஸ்லாமிய நற்சிந்தனை 6-20 தனிப்பாடல்கள், 7-00 தனிப்பாடல்கள், 7-30 திரை கானம், 7-45 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-00 இஸ்லாமிய கீதம்.

844 மீ அலை 49 மீ

பகல் 12-00 சித்திர கானம், 1-00 மாதர்கேட்டவை.

844 மீ. அலை 61 மீ.

மாலை 4-30 கல்வி மறுஒலிபரப்பு, 5-00 சிறுவர்பாடல்கள், 5-15 இளைஞர் கண்டுபிடிப்புகள், 5-45 கல்விச் சேவை.

இரவு 6-15 மெல்லிசை, 6-30 கதிர்காம காண்டம், 7-00 தமிழ்மூலம் சிங்களம், 7-45 பேச்சு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 கலைக்கோலம், 10-00 நேயர்விருப்பம், 10-30 செய்தித் தொகுப்பு.

---

## பிரயாணிகள் அவதி

புத்தளம், வியா. புத்தளம் பஸ் நிலையத்தில் வண்டிகள் புறப்படும், வந்துசேரும் நேர அட்டவணையைக் குறிக்கும் ஒரு பெரிய சுசிளைப் பலகை இருந்தும் வண்டிகளோ குறிப்பிட்ட நேரத்திற்கு புறப்படுவதும் இல்லை. வந்து சேருவதுமில்லை. சில வண்டிகள் சேவை ரத்து செய்யப்பட்டும் மற்றும்பல தாமதிக்கப்பட்டும் ஓடுகின்றன.

இவ்வித சேவையால் மாணவர்களும், ஆசிரியர்களும், கூட்டுஸ்தாபன அரசாங்க ஊழியர்களும் பிரதானமாக அல்லற்படுகின்றனர், பஸ் நிலையத்தில் உள்ள நேர அறிவிப்பாளர் பிரயாணிகட்கு பஸ்புறப்படும் வந்து சேரும் நேரங்களை தருவதற்கும் மறுக்கிறாராம்.

......

## வெங்காயத்துடன் 2 லொறிகள் பிடிபட்டன

குருநகர், வியாழன் வடபகுதியிலிருந்து வெங்காயம் ஏற்றிச்சென்ற இரண்டு லொறிகளை பளைக் கண்மையில் வைத்துப் பொலிசார் பிடித்தனர். யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்ட இரண்டு லொறிகள் பளைக்கண்மையில் வெங்காய மூடைகளை ஏற்றிக்கொண்டு கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருக்கையில் பளைப்பொலிசார் பளைக்கும் ஆனையிறவுக்குமிடையில் இந்த லொறிகளை மறித்துச் சோதனைசெய்த போது வெங்காயம் இருக்கக் கண்டுபிடித்தனர் விசாரணை நடைபெறுகிறது.

---

## வடக்கை நோக்கி மாவுக்கப்பல்

குருநகர், வியாழன் வடபகுதியை நோக்கி பான்பூல் என்னும் அமெரிக்கக் கப்பல் 9,000 தொன் கோதுமை மாவுடன் வந்துகொண்டிருக்கின்றது. இக்கப்பலில் வரும் மா பருத்தித்துறை துறைமுகத்தில் இறக்கப்படவிருக்கிறது. இக்கப்பல் பருத்தித்துறை துறைமுகத்தை அண்மிக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

அனலைதீவில்

## ரூ. 40 ஆயிரம் செலவில் அன்னதான மடம்

யாழ்ப்பாணம், வெள்ளி. பழம் பெருமைமிக்க அனலைதீவு ஐயனார் கோவில் புதிய அன்னதான மட வேலைகள் முடியுந் தறுவாயிலுள்ளன. ஒரே தடவையில் ஆயிரக்கணக்கானவர்கள் கலந்து கொள்வதற்கு வசதியாக 90 அடி நீளத்தில் அமைந்த இம்மடக் கட்டிட வேலைகள் நிதி நெருக்கடி காரணமாக இடையே நிறுத்தப்பட்டுள்ளன.

ஒன்றரை மாதகாலத்தில் சுமார் 30 ஆயிரம் ரூபா செலவில் கட்டிடத்தின் முக்கால் வாசிக்கு மேற்பட்ட வேலைகள் இதுவரை முடிந்துள்ள போதிலும் சீமெந்து தட்டுப்பாடு காரணமாகவும் பணமுடை காரணமாகவும் பூர்த்தி பெறாத நிலையிலுள்ளது.

கட்டிட வேலைகளைப் பூர்த்தியாக்க இன்னும் சுமார் 10 ஆயிரம் ரூபா தேவைப்படுவதாக அன்னதான மடத் திருப்பணிச் சபையைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்தார். ஊர்ப் பொது மக்களாலும் வெளியூர்களிலுள்ள வர்த்தகர்களாலும் உபகரிக்கப்பட்ட பணம் செலவாகிவிட்டதால் மேலும் இத்திருப்பணிக்கு நிதிதிரட்ட இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

---

## பாராட்டும் அனுதாபமும்

மாவிட்டபுரம், வியா. யாழ்ப்பாணம் எம். பி. திரு. மார்ட்டினின் நிலை குறித்து லங்கா சுதந்திரக் கட்சி காங்கேசன்துறைக் கிளை மத்திய குழு பாராட்டுத் தீர்மானம் நிறைவேற்றியது. உதவி அமைச்சர் திரு சோமவீர சந்திர சிறியின் மரணத்திற்கும் அனுதாபம் தெரிவிக்கப்பட்டது. இளைக்காரியாலயத்தில் திரு. ரி. பி முருகையா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கட்சியின் வேலைத்திட்டங்களை காங்கேசன் துறைப் பகுதியில் நடைமுறைப்படுத்தவதென்றும் முடிவுசெய்யப்பட்டது

---

## தமிழ் ஆசிரியர் சங்கம்

மாவிட்டபுரம், வியா. அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் வலி வடக்கு கிளையின் வருடாந்தக் கூட்டம் இம்மாதம் 15-ம் திகதி தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

ஆசிரியர்களாகப் பணியாற்றி ஓய்வு பெற்ற க. நவரத்தினம், ச. சொக்கலிங்கம், கா. கந்தையா, ச. நாகநாதன் ஆகியோரின் சேவை நலமும் அன்று பாராட்டப்படும்.

---

## இலவச வகுப்புகள்

யாழ்ப்பாணம், வெள்ளி. காரைநகர் தோப்புக்காடு கலை கலாச்சார மன்றத்தினர் தோப்புக்காடு மறைஞான சம்பந்த வித்தியாசாலையில் ஒவ்வொரு ஞாயிறும் அதன் முதல் நாளும் சமயம் சங்கீதம், வயலின், நடனம் முதலிய கலை வகுப்புகளை இலவசமாக நடாத்தி வருகின்றனர். இவ் வகுப்புகளைச் சங்கீதவித்துவான் திரு. கே. கம்பிரசா நடாத்தி வருகின்றார்.

# உலக வலம்

## ஆபத்தில் வெனிஸ்

வெனிஸ்

வெனிஸ் நகருக்கு நீராலும் காற்றாலும் பெரும் ஆபத்து ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. வெனிஸைச் சுற்றியுள்ள கடலின் நீர்மட்டம் வருடாவருடம் உயர்ந்துகொண்டே வருகின்றது. இதனால் வெனிஸ் நகரம் படிப்படியாகவே நீரில் மூழ்கிவண்ணம் இருக்கின்றது. இந்த ஆபத்தை விஞ்ஞானிகள் ஏற்கனவே அறிவித்துள்ளனர்.

இவ்வாறு வெனிஸ் நகர் நீரில் மூழ்கிக்கொண்டுபோவதால் இந்நகரின் ஜனத்தொகையில் மூன்றிலொரு பகுதி மக்கள் நகரைவிட்டு நீங்கி உயர்ந்த இடங்களில் குடியேறியுள்ளனர். கடல் அரிப்பால் இங்குள்ள அநேக கட்டிடங்களில் மக்கள் வசிக்கமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது. அடுத்த காற்றும் வெனிஸ் நகரின் செல்வத்தைப் பெருமளவில் பாதிக்கிறது. நச்சுக்காற்றால் ஆயிரக்கணக்கான சிற்பங்களும் ஓவியங்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

## வீட்டுக் காவலாளிகள்

லொஸ்ஏஞ்சல்ஸ்

கலிபோர்னியாவில் உள்ள இந்நகரில் இன்று வீட்டுக் காவலாளித் தொழில் பெருமளவில் அதிகரித்துள்ளது. வீட்டுச் சொந்தக்காரர்கள் இல்லாத வேளையில் அங்கு திருட்டுக்கள் அதிகரிப்பதன் காரணத்தினாலேயே இத்தொழில் வாய்ப்பும் பெருகியுள்ளதாகக் கூறப்படுகிறது.

வீட்டுச் சொந்தக்காரர் வெளியில் சென்றிருந்தால் அல்லது வேறு இடங்களுக்குச் சென்றிருந்தால் அந்த வீட்டைப் பொறுப்பெடுத்து அவர்கள் வரும்வரை அங்கு திருட்டோ அல்லது வேறுவித அசம்பாவிதங்களோ ஏற்படாது அவ்வீடுகளைப் பாதுகாப்பதே இவ்வீட்டுக் காவலாளித் தொழிலில் ஈடுபடுபவர்களின் வேலையாகும்.

இங்குள்ள மத்தியவகுப்பினரே இந்த வீட்டுக் காவலாளிகளை அடிக்கடி நாடுவர். வசதியுள்ள செல்வந்தர்கள் சொந்தமாகவே வசதியாக வேலைக்காரர்களை வைத்திருக்கின்றனர்.

இந்த மத்திய வகுப்பினர் தாங்கள் இல்லாத வேளையில் தங்கள் இல்லங்களைப் பாதுகாக்க நல்ல வீட்டுக் காவலாளிகளை ஏற்பாடு செய்வதற்குத் தினமும் விளம்பரங்களைப் பார்ப்பர்.

நடிகையாகவும், ஒரு ஸ்ருடியோவின் செயலாளராகவும் பல ஆண்டுகள் கடமையாற்றிய திருமதி மாக்ரெட்சிலி என்னும் வயோதிப மாது தற்போது இந்தத் தொழிலில் தீவிரமாக ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஜப்பானிய மகளிரின் எழுச்சி

டோக்கியோ

இன்று ஜப்பான் சகல துறைகளிலும் மேலைத்தேயமாகிக்கொண்டு வருகிறது. சமீபத்தில் பொருளாதாரத் திட்ட ஆய்வின்போது ஒவ்வொரு ஜப்பானியக் குடும்பத்திலும் கணவனும் மனைவியும் சமத்துவம் உடையவர்களாக எல்லாப் பொறுப்புகளையும் கவனிப்பவர்களாகவும், பிள்ளைகள் பூரண சுதந்திரத்தை அனுபவிப்பவர்களாகவும் உள்ளமை தெரியவந்துள்ளது.

ஜப்பானியர்களுக்கு முன்பு இத்தகைய சுதந்திரமும் சமத்துவமும் இருந்ததில்லை ஜப்பானில் பெண்களுக்குச் சுதந்திரம் வெளிப்படையாகப் பிரகடனப்படுத்தப்படவில்லையெனினும் இன்றைய ஜப்பானிய மகளிர் சகல துறைகளிலும் முன்னேறி வேலைவாய்ப்புக்கு ஆண்களோடு சரிநிகர் சமானமாக நின்று போட்டியிடுகின்றார்கள்.

இவர்களின் வாழ்க்கைத்தரம் வரவர உயர்ந்துகொண்டே வருகிறது. எனினும் சிலர் பழைய முறைகளை அனுசரித்துத் தனிப்பட்ட சுதந்திரமான இல்லங்களில் கிராமப்புறங்களில் வசிக்கின்றனர் இதே வேளையில் நகர்ப்புறங்களில் விண்ணுயர்ந்த மாடிவீடுகளும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

## கப்பற்படையின் முக்கியத்துவத்தைக் காப்பாற்றுக

லண்டன்

பிரிட்டனின் கடற்படைக் கப்பல்களின் எண்ணிக்கையை இன்று ஐக்கிய அமெரிக்காவும் சோவியத் யூனியனும் தோற்கடித்து விட்டன. இந்நாடுகளின் கடற்படைக் கப்பல்களின் எண்ணிக்கை பிரிட்டனிலும் பார்க்க அதிகரித்துள்ளது. எனினும் பிரிட்டன் தனது கப்பற் படையின் முக்கியத்துவத்தைக் காப்பாற்ற நவீன முறைகளை அனுசரித்துப் பெருமளவில் பணத்தைச் செலவழித்துக் கப்பல்களைக் கட்டுகிறது. இப்பொழுது கட்டப்படும் 19 கப்பல்களில் 5 அணு நீர்மூழ்கிக்கப்பல்களும் அடங்கியுள்ளன. இக்கப்பல்கள் யாவும் வாயுவில் இயங்கத்தக்கனவாயும் அதேவேளையில் சிறிய இடவசதியுள்ள கப்பல்களாகவும் இருக்கும்.

## 18-வது ஆண்டு பூர்த்தி விழா

புத்தூர், வியாழன்

நவக்கிரி எல்லாளன் சனசமூக நிலையம் தமது 18-வது ஆண்டு நிறைவு விழாவை இம்மாதம் 24-ம் திகதி கொண்டாடவிருக்கின்றது.

விழாவையொட்டி கோப்பாய்த் தொகுதிக்குள் வசிப்பவர்களுக்கென 25 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டியும் 6 மைல் மரதன் ஓட்டப்போட்டியும் மற்றும் பல சிறப்பு அம்சங்களும் இடம்பெறும்.

போட்டிக்கான ஏற்பாடுகளை நிலையத்தின் விளையாட்டுக்குழு கவனித்து வருகின்றது.

## இன்று விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், வெள்ளி

பரந்தன் இ. க. க. வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி இன்று மாலை நடைபெறவிருக்கிறது. கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி, வட்டாரக்கல்வி அதிகாரி திரு. க. இராசலிங்கம், டாக்டர் ஏ. இராசநாதன் ஆகியோர் கலந்துகொள்வார்கள். திருமதி ஈ. இராசநாதன் பரிசில்கள் வழங்குவார்; (கு. வி. ம.)

## அபராதம்

புத்தளம், வியாழன்

வடிசாராயம் வைத்திருந்தார்கள் என்று எம். ஆபரத்தினு, பிரான்சிஸ் பெரேரா ஆகியோருக்கெதிராக புத்தளம் பொலிசாரால் புத்தளம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் இருவருக்கும் நீதவான் அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

0 0 0

புத்தளம் ஆனைமடு கிராமத்தைச் சேர்ந்த 16 கிராமவாசிகள் உத்தரவுச்சீட்டின்றி முடிக்குரிய காணியில் மரம் வெட்டினார்கள் என்று குற்றஞ்சாட்டி தொடரப்பட்ட வழக்கில் புத்தளம் நீதிபதி திரு. கே. பாலகிருஷ்ணன் எதிரிகளை குற்றவாளிகளாகக் கண்டு தலா ரூபா 25 அபராதம் விதித்தார்.

தீவுப்பகுதி

# தாச்சிசுற்றுப்போட்டி: சிலமுடிவுகள்

அல்லைப்பிட்டி, வியா

விளையாட்டமைச்சின் ஆதரவுடன் தீவுப்பகுதி விளையாட்டுச் சங்கத்தினரால் திரு எஸ் சிவகடாட்சம் வெற்றிக் கேடயத்திற்காக நடாத்தப்பட்டு வரும் தாச்சிச்சுற்றுப்போட்டியின் சில முடிவுகள் பின்வருமாறு:-

காரம்பன் ஆர் டி எஸ் விளையாட்டுக்கழகமும்; புளியங்கூடல் மகாமாரி சனசமூகநிலையத்தினரும் மோதிக்கொண்ட போட்டியில் புளியங்கூடல் கோஷ்டியினர் வெற்றியீட்டினர். இப்போட்டி காரம்பனில் இடம்பெற்றது.

இறுப்பிட்டி சனசமூகநிலையக் கோஷ்டிக்கும் நம்பாட்டி காந்திஜி சனசமூக நிலைய 'ஏ' பிரிவுக்கோஷ்டிக்குமிடையில் நடந்த போட்டியில் இறுப்பிட்டி சனசமூக நிலையத்தினர் வெற்றியீட்டினர்.

வருத்திவடைப்பு சனசமூக நிலைய கோஷ்டியினரும் வேலணை தேவி கோட்டம் சனசமூக நிலைய கோஷ்டியினரும் மோதிய போட்டியில் வருத்திவடைப்பு கோஷ்டியினர் வெற்றியீட்டினர் இப்போட்டிகள் புளியங்கூடலில் நடைபெற்றது.

புங்குடுதீவு பாரதி சனசமூக நிலையக் கோஷ்டியினருக்கும் வேலணை மகேஸ்வரி சனசமூக நிலையக் கோஷ்டியினருக்குமிடையே நடைபெற்ற போட்டியில் பாரதி சனசமூக நிலையம் அதிகபுள்ளிகளைப் பெற்று வெற்றியீட்டியது.

புளியங்கூடல் மகாமாரி சனசமூக நிலையக் கோஷ்டியினரும் புங்குடுதீவு இறுப்பிட்டி சனசமூக நிலையக் கோஷ்டியினரும் மோதிக்கொண்ட போட்டியிலும் இறுப்பிட்டிக் கோஷ்டியினர் வெற்றியீட்டினர். இப்போட்டி வேலணை ஐக்கிய விளையாட்டுக் கழகத்திடலில் நடைபெற்றது.

போட்டிக்கு தீவுப்பகுதி உடற்பயிற்சி போதனாசிரியர் திரு பொன்னுச்சாமி மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

### இறுதிப்போட்டிக்கு தெரிவு

தீவுப்பகுதி விளையாட்டுச் சங்கத்தினர் விளையாட்டமைச்சின் ஆதரவுடன் திரு எஸ் சிவகடாட்சத்தின் வெற்றிக்கேடயத்திற்காக நடாத்தப்படும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் புங்குடுதீவு பாரதி சனசமூக நிலயக் கோஷ்டியினரும்; புங்குடுதீவு இறுப்பிட்டி சனசமூக நிலையக் கோஷ்டியினரும் மோதிக்கொண்டபோது 14-7 புள்ளிகளால் பாரதி கோஷ்டி வெற்றியீட்டி இறுதிப் போட்டிக்கு தெரிவாகியது. வேலணை ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு தீவுப்பகுதி உடற்பயிற்சிப் போதனாசிரியர் திரு பி பொன்னுச்சாமி மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

# நல்லூர் நாற்பது

[ கவிஞர் வி. கந்தவனம் ]

மாடங்கள் மடங்கள்பேர் மண்டபங்கள்
மன்றங்கள் பந்தல்கள் வாடி வீடு
ஆடுகொடிப் பந்தல்கள் அப்போ தென்றும்
அந்தரக் குடிசைகள் அண்டி யுள்ள
வீடெல்லாம் விரிந்தோடி விளங்கும் நற்பேர்
வீதிகள் பாதைகள் மிஞ்சி யுள்ள
ஊடெல்லாம் கோடியோ கோடை பக்த
ஊரெல்லாம் உறைவரே உருகி மக்கள்!

விடிகாலை பெருக்காற்று வீதி யாவும்
விரைந்தோடிக் கடல்நல்லூர் விம்மிக் கூடும்
பிடிவாதம் பலவாறு பிடித்தே சீற்றப்
பிறைகொண்ட சடையானின் பிள்ளை பன்புக்
கடியார்கள் ஆளாகி யாருக் கண்ணீர்
அலைமோத அழிவாக வலைக்கும் அல்லல்
விடியாத வாழ்நாளின் விடிவைக் காண
விரைந்துள்ளம் விளக்கத்தில் வியர்ந்தே
வீழ்வார்!

அசையாத மணிமோசை யாறு மார்க்க
அடிக்கமணி எட்டெழுகி லாறு கூடும்
திசையாவும் பழிதீர்ந்து சிறப்பி லோங்கத்
தீபங்கள் சின்னங்கள் சிரசச் சூழ
இசைவாயும் கருவிகளும் இசைப்பப் பத்தர்
இருகைகள் தலைமேற இணைபி வின்ப
விசைமீற விண்ணூர்க்கச் சிலிர்க்கத் திக்கு
வெல்லமுகிற் கல்லழுகிற் சொல்ல வொண்ணுப்

வேரழகிற் சிரணியிற் பெற்ற நல்ல
ஊர்மயிலிற் சேர்கொடியு முற்ற வேலும்
ஈரழகி மார்களிரு பக்க மேற்க
வார்கருணை முறுவலுடன் வடிவி லோங்குந்
தேரெனவே பேரொளியுந் திகைத்து நிற்கச்
செல்லுகையிற் சொல்லுதுயர் வெல்லு இன்ற
ஆர்கழலும் அடியவருக் காகுங் காட்சி
அரகரவோ அரகரவோ அமிழ்தக் காட்சி!

பார்ப்பார்கள் பார்ப்பார்கள் பக்தர் கைகள்
கோர்ப்பார்கள் கொள்வார்கள் கொள்ளா
இன்பம்
ஆர்ப்பார்கள் முருகனை அமிழ்தை யுண்டே
பருமைமோ வருமைமென் றுடிப் பாடி
வார்ப்பார்கள் கண்ணீரை வற்று ஊற்றும்
வடிவேலன் வழங்கவோ வாழ்வின் பேற்றை
சேர்ப்பார்கள் வேலாவோ வேலா என்பார்
வேண்டுவன வேண்டாத வேண்டிக்
கொள்வார்

கார்கண்ட மயில்போலக் களிப்பார் பல்லோர்
கண்பெற்ற முகம்போல ஒளிப்பார் பல்லோர்
நீர்கண்ட நிலம்போல நிறைவார் பல்லோர்
நிகரற்ற நூல்செய்து நிலைப்பார் பல்லோர்
பசிகண்ட பொருள்பெற்ற பசிபோர் பல்லோர்
பைந்தமிழைச் சுவைத்தினிது பயின்றோர்
பல்லோர்
ஊர்கண்டு தேர்கொண்ட உருவத் தேனை
உண்டிங்கு பெற்றுள்ள உரிமை உய்வார்

வாராத பேரில்லை வந்தே தீர்வார்
வாழ்நாளை வளமாக்கும் மனங்கொள் காட்சி
பாராத பேரில்லைப் பார்த்தே தீர்வார்
பயனென்று பேறில்லைப் பன்னீர்க் காட்சி
நேராத பேரின்பம் நேர்ந்தே தீரும்
நெஞ்சம்நெக் குருகிவிழும் நீர்க்கண் காட்சி
தீராத வினையாவும் தீர்ந்தே தீரும்
தீர்த்தம்வேல் ஆடவரும் திருப்பொற் காட்சி.

அடியார்கள் ஆளாகும் அருட்பொற் காட்சி
அல்லலுடை டுமியமும் அழியுங் காட்சி
விடியாத வாழ்வங்கு விடியுங் காட்சி
விண்டமிழின் அமுதமணம் வீசும் காட்சி
முடியாத முயற்சிகளும் முடியுங் காட்சி
முத்தமிழ்வல் லாட்சியினை முகடுங் காட்சி
அடியார்கள் படிமீதில் ஆடிப் பாட
ஐவர்களும் தாநீரில் ஆடுங் காட்சி!

உடையாத உள்ளங்கள் உடையுங் காட்சி
உண்மையினை உணர்ந்தவர்கள் உருகுங் காட்சி
அடையாத அருமுரிமை அடையுங் காட்சி
அடியவர்கள் வீட்டுப்பே றடையுங் காட்சி
படையாக நெடுநேரம் படிகள் மீதில்
புடைசூழ்ந்த அடியார்கள் பூக்க முக்கண்
உடையானும் வேலோருஞ் சுருமொன்றுய்ச்
உளமாடி நீராடி உலகம் உய்யும்!

(தொடரும்)

## பஜனை பாத யாத்திரை

யாழ்ப்பாணம், வெள்ளி

நல்லூர்த் திருவிழாவையொட்டி வருகிற புதன்கிழமை (18-8-71) அதிகாலை நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்திலிருந்து பஜனை பாதயாத்திரைக் கோஷ்டி ஒன்று புங்குடுதீவு மேற்கு, பெருங்காடு; கலட்டி; புங்குடுதீவு கிழக்கு; மடத்துவெளி; வேலணை; மண்கும்பான்; [illegible]; வண்ணார்பண்ணை ஆகிய இடங்களூடாக நல்லூரைச் சென்றடையும்.

இந்தபாதயாத்திரையில் மட்டக்களப்பைச்சேர்ந்த ஸ்ரீ ஓங்காரானந்த சுவாமிகள்; கதிர்காமம் - ஸ்ரீ ஜோதிர்மயானந்தசுவாமிகள் புங்குடுதீவு ஸ்ரீ சதானந்தசுவாமிகள் காரைக்கால் ஸ்ரீ வைதியாகசுவாமிகள் நாவலப்பிட்டி திரு - நா முத்தையா திருப்பூங்குடி ஆறுமுகம் இன்னும் பல அன்பர்கள் கலந்துகொள்கின்றனர்.

## மணிவாக்கு

இயற்கை மனிதனுக்கு இரண்டு காதுகளும், இரண்டு கண்களும் கொடுத்திருக்கின்றது. ஆனால் நாக்கு மட்டும் ஒன்றுதான், பேசுவதைக்காட்டிலும் பார்ப்பதும் கேட்பதும்தான் அதிகம் இருக்கவேண்டும் என்பதே பொருள்.

—சோக்கிரட்டீஸ்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams; "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

[illegible] விரோதிகிருது வருஷம் ஆடிமாதம் 28-ந் திகதி (13-8-71)


## சம அந்தஸ்து

புது சீன ஆஸ்பத்திரியிலே தங்கள் தேசிய வைத்திய முறையையும் மேற்கத்திய வைத்திய முறையையும் இணைத்து வெற்றிகரமாக எப்படிச் சிகிச்சை செய்கின்றார்கள் என்பதைப் பற்றி அமெரிக்கப் பத்திரிகைக்காரரான திரு ஜேம்ஸ் ரஸ்டன் தமது சொந்த அனுபவங்களை வெளியிட்டுள்ளார். இதை அறிந்தபின்பாவது நம் இலங்கையிலும் நமது நாட்டு வைத்திய முறைகளை வேற்றுமைப்படுத்தி ஒதுக்காமல் மேற்கத்திய வைத்தியத்தைப் போலச் சர்வகலாசாலைகளிலும் படிப்பித்து ஆஸ்பத்திரிகளிலும் சம அந்தஸ்து அளிக்க ஆவன செய்யப்படவேண்டும் என்று நமது ஆங்கில சக வர்த்தமானியாகிய "டெயிலி நியூஸ்" ஆணித்தரமாக எழுதியுள்ளது வீண்போகாதென்றே நம்புகிறோம்.

நாடு அடிமைப்படுவதற்கு முன் சித்த, ஆயுர்வேத, யூனானி முறைகளே இங்கு இருந்துவந்தன. பின்னர் சுமார் 400 ஆண்டுகளாக மேற்கத்திய வைத்தியமுறையையே அந்நிய ஆட்சியினர் ஆதரித்து அபிவிருத்தி செய்துவந்தனர். அரசாங்க ஆதரவற்றிருந்த நாட்டு வைத்திய முறைகளைத் தனிப்பட்ட வைத்தியக் குடும்பங்கள் கையாண்டு மக்களுக்கு மேலான பணிசெய்து வந்திராவிடில் அந்த வைத்திய முறைகள் இங்கு மறைந்திருக்கும். பொதுமக்களுக்கு நாட்டுவைத்திய முறையில் எவ்வளவு நம்பிக்கை இருந்துவருகிறதென்பதை விளக்கத் தேவையில்லை. இந்த நம்பிக்கைக்குக் காரணம், அனுபவத்தில் கண்ட பலனைத்தான் இருக்கமுடியும்.

நாடு ஓரளவு சுயாட்சி பெற்றதும் நாட்டு வைத்திய முறைகளுக்கு இங்கு அரசாங்கம் அங்கீகாரம் அளித்து ஆதரவளித்தது. நாடு சுதந்திரம் பெற்ற பின் ஆதரவு அதிகரித்து வருகிறது. என்றாலும் மேற்கத்திய வைத்தியப் பயிற்சிபெற்ற டாக்டர்களுக்கும் ஆயுர்வேத, சித்த, யூனானி டாக்டர்களுக்கும் சம்பளம் முதலியவற்றில் அதிக வேற்றுமைகளை அரசாங்கம் காட்டிவருவதைப் பார்க்கலாம். பல நூற்றாண்டுகளாக நம் நாட்டு வைத்திய முறைகள் அரசாங்க ஆதரவு இல்லாத நிலையில் ஆராய்ச்சிகள் இன்றி முன்னேற முடியாமல் இருந்துள்ளது மெய்யே. சில வைத்தியக் குடும்பங்கள் பலபல அபூர்வ மருந்துகளை இரகசியமாகவே வைத்துக்கொண்டுள்ளன. அவற்றைப் பொதுமக்களுக்குப் பயன்படும்படி செய்யச் சிற்சில முயற்சிகளை அரசாங்கம் செய்து வருகிறதென்றாலும் இம்முயற்சி பூரணமாகப் பயனளிக்கவில்லை.

மேற்கத்திய வைத்தியப் படிப்பைப்போல் பல்கலைக்கழகத்தில் நாட்டு வைத்திய முறைகளையும் கற்பிப்பதாயின், நவீன ஆராய்ச்சிகள் நடத்தி நமது வைத்திய முறைகளும் அபிவிருத்தியடைய முடியும் அல்லது வைத்திய மாணவர்களுக்கு இவ்விருவித முறைகளையும் கற்பிக்கச் செய்யலாம். இப்படிச் செய்வது சில டாக்டர்களுக்குப் பிடிக்காது. இதை அவர்கள் எதிர்க்கலாம். ஆனால் பொதுமக்களுக்கு இதுபற்றிய விருப்பு வெறுப்புகளிடையே எப்படியாவது தங்கள் நோய் குணமானால் போதுமென்பதே அவர்கள் ஆவல். காலஞ்சென்ற டாக்டர் பணிக்கர் போன்றவர்கள் இரு வைத்திய முறைகளிலும் பயிற்சிபெற்றுப் பொதுமக்களுக்கு மேலான பணி செய்துவந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

[illegible] நோய்களும், நோயாளர் எண்ணிக்கையும் அதிகரிக்கின்றன. ஆஸ்பத்திரியில் இடம் இல்லை. நாட்டு வைத்திய சிகிச்சை இல்லாவிடில் நிலைமை மிக மோசமாகும். நாட்டு வைத்தியத்தில் செலவு அதிகமில்லை. வெளிநாட்டுச் செலாவணியும் தேவையில்லை. ஆகவே அரசாங்கம் நாட்டுவைத்திய முறைகளுக்கும், டாக்டர்களுக்கும் மேனாட்டு வைத்தியத்திற்கு அளிக்கும் அதே அந்தஸ்தை அளித்து ஒவ்வொரு ஆஸ்பத்திரியிலும் இரு வைத்தியமுறைச் சிகிச்சைகளும் கிடைக்கும்படி செய்தால் பொதுமக்களுக்கு அது பலவிதங்களிலும் நன்மையாவதுடன் அரசாங்கத்துக்கும் அது உதவியாக இருக்கும். ஒரு சுதந்திர நாடான இலங்கையில் அதன் தேசிய வைத்திய முறைகளை இனியும் நாமே அவமதிக்காமல் அவற்றுக்குச் சம அந்தஸ்தும், சம சந்தர்ப்பமும் அளிக்கவேண்டியது எவ்வளவு அவசியமென்பதைப் புது சீனத்திடமிருந்து நாம் கற்கக்கூடியதாக உள்ளது.


### தேவை

ஆங்கிலம் தமிழ் தெரிந்த லிகிதர் தேவை. விண்ணப்பிக்கவும், அதிபர் 211 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

8470


# ‘நாவலர் வழியை இளைஞர் பின்பற்றுக’

அரியாலை, வெள்ளி

"சைவமும் தமிழும் தழைத்தோங்க அன்று நல்லை தந்த நாவலர்செய்த சேவைகள் அளப்பரியன. அவர் வழிநின்று நாமும் நம்மதத்தையும் மொழியையும் போற்றிப் பாதுகாக்கவேண்டும். நமது இனம் சைவச் சமுதாயம் இன்று மத அறிவிலோ மொழி அறிவிலோ பின்தங்கி இருப்பதும் சிந்திக்கவேண்டியதே. இவ்வேளையில் இளைஞர்களை நல்வழிப்படுத்தி, ஆன்மீக வழியில் அழைத்துச்செல்லவேண்டும். அவர்களை ஆன்மீக வளர்ச்சியில் அக்கறை உள்ளவர்களாக ஆக்கவேண்டும்.

இவ்வாறு நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் "நல்லை அழகன்" நூல் வெளியீட்டு விழாவுக்கு தலைமைவகித்து உரையாற்றிய யாழ் முன்னாள் முதல்வர் திரு. சி. நாகராசா கூறினார்.

யாழ் பதில் மேயர் திரு. ஆ. துரைராஜசிங்கம் பேசுகையில், சைவசமயம் ஒருபோதும் அதன் பொலிவினை இழந்ததில்லை. ஆனால் சமயத்தை வழிநடத்துவோர் சிலரின் தாழ்வுற்ற ஒழுக்க நிலைமைகளும் சமய நெறிகளை முற்றாக கடைப்பிடித்து நடவாததுமே சமயப்பற்று மக்களிடையே தழைத்தோங்க தடையாக இருக்கிறது. ஆகவே சமய வழிகாட்டிகள் சீரிய ஒழுக்கமுடையவர்களாக சமய நெறி பிறழாதவர்களாக சமய அனுஷ்டான சீலர்களாக திகழவேண்டும்.

ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகளிடமிருந்து உதவி முதல்வர் "நல்லை அழகன்" நூலின் முதற் பிரதியை வாங்கினார்.

# நீதிபதிகளுக்கு நிர்வாகப் பொறுப்பு இருக்காது

கோட்டை, வியாழன்

இவ்வருடம் ஒக்டோபர் மாதத்திலிருந்து நீதிபதிகள் நிர்வாக வேலைகளிலிருந்து விடுவிக்கப்படுவார்கள். நீதிமன்றங்களில் பைசலாகாமல் தேங்கிக்கிடக்கும் வழக்குகளை விரைவில் விசாரித்து முடிப்பதற்காகவே இந்த ஏற்பாடுசெய்யப்படுகிறது

தற்பொழுது மாவட்ட நீதிபதிகள் மாஜிஸ்திரேட்டுகள், கிராமிய நீதிமன்ற தலைவர்கள் போன்றவர்கள் தங்களின் உத்தியோகபூர்வமான வேலை நேரங்களில் பெருவாரியாக நிர்வாக விஷயங்களிலேயே செலவிட வேண்டியிருக்கிறது. இதன் காரணமாகவே ஏராளமான வழக்குகள் பைசலாகாமல் தேங்கிக்கிடக்கின்றன. நீதிமன்றங்களில் நிர்வாக சம்பந்தமான பணிகளை மேற்கொள்வதற்காக ஒக்டோபர் 1-ம் திகதியிலிருந்து 12 பிராந்திய காரியாலயங்கள் நீதி அமைச்சினால் நிறுவப்படவிருக்கின்றன. இந்தக் காரியாலயங்கள் நிர்வாகக் காரியதரிசிகளின்கீழ் இயங்கவிருக்கின்றன. கொழும்பில் இம்மாதிரியான இரண்டு காரியாலயங்கள் இயங்கும். மற்றவை அனுராதபுரம், பதுளை, கம்பஹா, மட்டக்களப்பு, மாத்தறை, குருநாகல், காலி, யாழ்ப்பாணம், கண்டி, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் நிறுவப்படும்.

# திருடச்சென்ற வாலிபரை மழைகாட்டிக் கொடுத்தது!

மாவிட்டபுரம் வியாழன்

சாப்பிடுவதற்குப் பணம் இல்லையென்று கவலைப்பட்ட இளைஞர் ஒருவர் திருட்டு முயற்சியில் ஈடுபட்டு கடைக் கூரையின்மீது ஏறியிருந்தார் எதிர்பாராது பெய்த மழையினால் இளைஞன் கையும் மெய்யுமாகச் சிக்கினார்

காங்கேசன்துறைப் பகுதியில் உள்ள முருகையா என்பவருடைய கடைக் கூரையின்மீது ஓர் இளைஞர் ஏறி ஓட்டைப் பிரித்து சீற்றுக்குள் பதுங்கிக்கொண்டிருந்தார் எதிர்பாராது பெய்த மழையினால் கடைக்குள்ளிருந்தவர்களின்மீது ஒழுகியது. வழக்கத்திற்கு மாறாகக் கடைக்குள் ஒழுகுவதன் மர்மத்தைப் பார்ப்பதற்காக கடைக்காரர் கடைக்கூரைமேல் ஏறிப்பார்த்தபோது சீற்றுக்குள் ஒருவர் பதுங்கிக்கொண்டிருந்தார் அதையடுத்து கடைக்காரர் திருடன் என்று கூச்சலிட்டதும் பதுங்கியிருந்தவர் சீற்றை உடைத்துக்கொண்டு கடைக்குள் விழுந்தார் உடனே கடைக்காரர் அவரைப் பிடித்து காங்கேசன்துறைப் பொலிசில் ஒப்படைத்தார்

காங்கேசன்துறைப் பொலிஸ் சார்ஜன் எம் தம்பையா சந்தேக நபரை மல்லாகம் நீதிமன்றத்தில் நீதிபதி எஸ் ஆனந்தக்குமாரசாமி முன்னிலையில் ஆஜர் செய்தார், சந்தேகநபரான ஆ. பரமேஸ்வரன் தான் சாப்பிடப் பணம் இல்லாததால்தான் திருட முயற்சித்ததாகக் கூறி குற்றத்தை ஒப்புக்கொண்டார் இம்மாதம் 13-ம் திகதி வரை சந்தேக நபரை றிமாண்டில் வைக்கும்படி நீதிபதி உத்தரவிட்டார்

—

### இரண்டு வீடுகள் எரிந்து சாம்பல்

சுழிபுரம், வியாழன்

சுழிபுரம் கல்லவேம்படியில் நேற்று முன்தினமிரவு இரண்டு வீடுகள் தீக்கிரையாகின நாகப்பர் கார்த்திகேசு என்பவரது வீடு திடீரெனத் தீப்பற்றியதாகவும், இதைத்தொடர்ந்து அயலிலுள்ள திருமதி க. செல்லம் என்பவரது வீட்டில் தீ பரவியதாகவும் கூறப்பட்டது.


## யாழ். மத்திய கல்லூரி

### க. பொ. த. [உயர்தர] கலை, விஞ்ஞான, வர்த்தக வகுப்புகள்

மேற்படி வகுப்புகளில் (Gr. II) சில காலி இடங்கள் உள. 1-1-54 இற்குப் பின் பிறந்தவர்கள் க. பொ. த. சாதாரண பெறுபேறுகளுடன் உடன் விண்ணப்பிக்குக.

2963 அதிபர்


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## இன்று

யாழ்ப்பாணம், வெள்ளி

நல்லூர்க்கந்தன் திருப்புகழ் மண்டப பக்திப்பாடல் இசையரங்கில் மாலை 6-30 மணிமுதல் செல்வி நவமணி நாகலிங்கம் பாடுவார்கள் இரவு 9-30 மணிமுதல் தொடர்ந்து நடைபெறும் திருவிளையாடல் விரிவுரையில்— "மண் சுமந்த மஹாதேவன்" என்ற பொருள் பற்றி ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் இன்னிசை விரிவுரை ஆற்றுவார்.

0 0 0

சுழிபுரம், வெள்ளி

வழக்கம்பரை மகாமாரியம்மன் ஆலயத்தில் இன்று மகாகும்பாபிஷேகம் நடைபெறுகிறது பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி சொற்பொழிவாற்றுவார், மகேஸ்வர பூசையும் இடம்பெறும்.

0 0 0

தாவடி, வியாழன்

இன்று தாவடி சைவ இளைஞர் மன்ற முன்றலில் மிருதங்க வித்துவான் திரு. எம். என். செல்லத்துரைக்கு 'மிருதங்க மணி' பட்டம் வழங்கப்படவுள்ளது. அளவையூர் அருட்கவி சீ. விநாசித்தம்பி, முன்னாள் மாவட்ட நீதிபதி சி. தம்பித்துரை ஆகியோர் ஆசியுரை வழங்குவர்.

## இன்று ஜே.பி யாக சத்தியப்பிரமாணம்



உரும்பராய், வெள்ளி

சமாதானநீதவானாக நியமனம் பெற்றுள்ள உரும்பராயைச் சேர்ந்த க. தனஞானம் யாழ்ப்பாணம் மாவட்ட நீதமன்றத்தில் இன்று சத்தியப்பிரமாணம் செய்யவிருக்கிறார்.

அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் பொதுச்சபை உறுப்பினரும், கம்யூனிஸ்ட்கட்சி வடபிரதேச வாலிபர்சங்கத் தலைவருமான இவர், உரும்பராய் — ஊரெழு பட்டின சபையின் உபதலைவராகவும் பணியாற்றியுள்ளார் கடந்த வருடம் சோவியத்யூனியனில் நடைபெற்ற சர்வதேச மாநாட்டில் கம்யூனிஸ்ட் கட்சியின் வடபிரதேசப் பிரதிநிதியாக கலந்துகொண்ட இளைஞரான இவர் உரும்பராய் இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சுவீப்புக்கு வீடுகள் பரிசு

கோட்டை, வியா

தேசிய லொத்தர் சபை சீட்டிழுப்பில் பரிசு பெறுபவர்களுக்கு வீடுகளைப் பரிசாக வழங்குவது பற்றி லொத்தர்சபை ஆலோசித்து வருவதாக தேசியலொத்தர் சபைத் தலைவர் இன்று தெரிவித்தார்.

பத்திரிகையாளர் மாநாட்டில் பேசிய அவர், ஆறுதல் பரிசுமுறை திருப்தியாக இருப்பதாகவும், வீடுகளைப் பரிசாக வழங்கும்திட்டம் அமுலுக்குவந்தால், பரிசு பெறுவோர் தமக்கு விருப்பமான வீடுகளைத் தேர்ந்தெடுக்கலாம் என்றும் கூறினார்.